www.padippakam.com

தமிழீழ விடுதலைப் புலிகள்

LIBERATION TIGERS OF THAMIL EALAM

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## LIBERATION TIGERS OF THAMIL EALAM

# நாடுகடத்தப்பட்ட நிலையில் தமிழீழ அரசு

லண்டனிலுள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் திரு வைகுந்தவாசன் 1982-ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று தமிழீழ அரசைப் பிரகடனப்படுத்துவது சம்பந்தமாக ஒரு பூர்வாங்கத் திட்ட வரைவை வெளியிட்டிருக்கிறார். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களை விமர்சிப்பதோடு அல்லாமல் இப்பிரகடனம்பற்றி எமது இயக்கத்தின் நிலையை ஈழத் தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

1980-ம் ஆண்டு ஆவணி 31-ந் திகதி லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவில் நிறைவெய்திய தீர்மானத்தில் 1982-ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று சுதந்திரத் தமிழீழம் உதயமாகும் என்று முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த இமாலய சாதனையை எப்படிச்சாதிப்பது என்பது பற்றி இத் தீர்மானத்தில் எதுவித விபரமோ விளக்கமோ அளிக்கப்படவில்லை. ஆயினும் லண்டன் பிரகடனம் சம்பந்தமாக தமிழீழ அரசியல் அரங்கில் மிகவும் குழப்பகரமான சர்ச்சை எழுந்தது. உலக அரசியல் வரலாற்றில் ஆழமான தரிசனம் அற்றோரும், ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தின் சிக்கலான பரிமாணங்களை நன்கு புரியாதவர்களும், அவசரபுத்தியுடைய கற்பனாவாதிகளும், லண்டன் பிரகடனத்தை எடுத்த எடுப்பில் குருட்டுத்தனமாக வரவேற்றோர்கள். பிரகனடத்தின் நோக்கம், உள்ளடக்கம், இலக்குகள், அவற்றால் எழக்கூடிய அரசியல் தர்க்கங்கள் ஆகியவற்றை நன்கு ஆய்வு செய்யாமல் அவசரபுத்தியில் ஆதரவை அளித்தார்கள். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்ல தீவிரமான செயற்திட்டம் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்று கூட்டணித்தலைமையில் எழுந்த விரக்தியானது, தமிழீழத்தை வெளிநாட்டிலிருந்தாவது இறக்குமதி செய்யலாம் என்ற கற்பனாவாதத்தில் இவர்களைத் தள்ளியது போலும். கூட்டணியைக் கிள்ளிக்கொண்டு, தொட்டிலையும் ஆட்டிக்கொண்டு, 'தைப்பொங்கலன்று தமிழீழம் வருகிறது' என்று தாலாட்டுப்பாடி வந்த இவர்களது அரசியல் பித்தலாட்டமானது மக்கள் மத்தியில் ஒருபுறம் புதிரையும் மறுபுறம் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. செயற்திட்டம் எதுவும் வரிக்கப்படாத பூடகமான ஒரு தீர்மானத்தை மூலமாக வைத்துக்கொண்டு சர்ச்சைகளில் ஈடுபடுதல் அர்த்தமில்லை என்பதால் நாம் மௌனமாக இருந்துவிட்டோம்.

ஆனால் திரு. வைகுந்தவாசன் சமீபத்தில் (14-11-1981) வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் லண்டன் பிரகடனத்தின் இலக்குகளை விளக்கும் வகையில் ஒரு பூர்வாங்க திட்ட வரைவை வெளியிட்டிருக்கிறார். 1982 தைப்பொங்கல் தினத்தன்று நாடுகடத்தப்பட்ட நிலையிலான ஒரு தற்காலிக தமிழீழ அரசைப் பிரகடனப்படுத்துவது; அதன்பின் ஐ. நா. மூலமும், ஐ. நா. அமைப்பின் கீழுள்ள சர்வதேச சட்ட நிறுவனங்கள் வாயிலாகவும் எமது பாரம்பரிய பிரதேசங்களுக்கு சட்ட ஆட்சியுரிமை வேண்டுவது-இவைதான் இத்திட்டத்தின் சாராம்ச நோக்குகளாகும். எமது நிலைக்கு முற்றிலும் ஒவ்வாத தற்காலிக அரசுகள் நிறுவப்பட்ட வரலாற்றுச்சான்றுகளைக் குறிப்பிட்டுக்காட்டும் அதேவேளை, நெருக்கடி எழுந்தால் ஐ. நா. படைகள் வந்து குறுக்கிடலாம் என்ற வகையிலும் மிகவும் சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களும் இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

மொத்தத்தில் பார்க்கும்போது, இப்பிரகடனமானது எமது தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கோ அன்றி சட்ட ஆட்சியுரிமையும் இறைமையுமுடைய ஒரு சுதந்திர அரசை அமைப்பதற்கோ உருப்படியான செயற்திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை என்றே கூறவேண்டும். அதுமட்டுமன்றி இத்திட்டமானது, எமது இயக்கம் வரித்துள்ள ஆயுதப்புரட்சிப் போராட்டத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் மக்களைத் திசைதிருப்பி விடுவதாகவும் அமையும்.

நாடுகடத்தப்பட்ட நிலையில் தற்காலிக தமிழீழ அரசை அமைக்கும் திட்டத்தை நாம் கொள்கையளவில் எதிர்க்கவில்லை ஆனால் அது யாரால், எந்தச் சூழ்நிலையில், எந்த இலக்கோடு அமைக்கப்பட வேண்டும் என்பதே இங்கு முக்கியமான பிரச்னையாகும். தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தலைவிதியை பாதிக்கக்கூடிய அதிமுக்கிய விவகாரங்களில் மக்களின் ஏகோபித்த ஆதரவு இல்லாமல், அதற்கான சூழ்நிலை எழுமுன் தன்னிச்சையாக சில தனிநபர்கள் தமிழீழ அரசை வெளிநாட்டில் அமைக்க முயல்வது எமது சுதந்திரப் போராட்டத்தை வெறும் கேலிக் கூத்தாகச் செய்வதாக முடியும்.

நாடுபெயர்ந்த அரசுகள் நிறுவப்பட்டதாக திரு. வைகுந்தவாசன் சில வரலாற்று உதாரணங்களைக் குறிப்பிடுகிறார். சீனா (டாக்டர் சண்யற்சென்) இந்தியா (சுபாஸ் சந்திரபோஸ்) போலாந்து (ஜெனரல் சிரோஸ்கி) கம்பூச்சியா (இளவரசர் சியாநூக்)போன்ற உதாரணங்களை எடுத்தாயும்போது அந்தந்த நாடுகளின் சுதந்திர வரலாற்றுச் சூழ்நிலை, தேசிய விடுதலைத் தலைவர்களின் நிலைப்பாடு, பிற நாடுகளின் ஆதரவு போன்றவற்றை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது, இவ்வுதாரணங்களை எமது இன்றைய நிலைக்கு இணையொப்புச் செய்யமுடியாதென்றே சொல்ல வேண்டும். அப்படித்தான் நாடுகடத்தப்பட்ட நிலையில் ஒரு அரசைப் பிரகடனப்படுத்துவதாயினும் அந்த அரசைப் பொறுப்பேற்று நடத்தும் தலைமைப்பீடத்தின தகுதி, உரிமை, அதிகாரம் போன்றவற்றையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். எமது மக்களின் விடுதலைக்காக நேரடிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதும், ஸ்ரீ லங்கா பாராளுமன்ற ஆட்சியமைப்பில் பங்குகொள்ளாததுமான ஒரு புரட்சிகர வெகுசன விடுதலை இயக்கம் வெளிநாட்டு ஆதரவுடன் இப்படியான அரசைப் பிரகடனப்படுத்துவது சாலச்சிறந்தது. இதற்கு இன்னும் காலம் கனியவில்லை என்பதே எமது நிலை.

ஐ. நா. சபை மூலமும், ஐ. நா. அமைப்பின் கீழுள்ள சர்வதேச சட்ட நிறுவனங்கள் வாயிலாகவும் எமது பிரதேச ஆட்சியுரிமையை நிலை நிறுத்தலாமென இப்பூர்வாங்கத் திட்டத்தில் கூறப்படுகிறது. பிரதேச ஆட்சியுரிமைக்கும், சுயநிர்ணய உரிமைக்குமுள்ள அதிகார வரம்புகள் இங்கு வரையறுக்கப்படவில்லை. நாம் வேண்டுவது சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக்கொண்ட பரிபூரண இறைமையுடைய சுதந்திர அரசே அன்றி பிரதேச நீதிபரிபாலன ஆட்சியுரிமையல்ல. இந்த ரீதியில் ஐ. நா. சபையோ அன்றி ஐ. நாவின் சட்டமன்றங்களோ எமது தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து எமக்குத் தேசிய விடுதலையைப் பெற்றுத்தரும் சட்ட அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை மனித உரிமைகள் மீறப்படும்பொழுது ஆட்சேபம் தெரிவிக்கும் அந்தஸ்த்தைத் தவிர ஒரு நாட்டில் நேரடியாகக் குறுக்கிடும் அதிகாரங்கள் இந்த சர்வதேச சட்ட நிறுவனங்களுக்கு இல்லை.

இன்றைய ஐ. நா. சபையானது சட்டப்பல்லற்ற, சர்வதேச அரசியல் அதிகாரமற்ற, வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்ட ஒரு நிறுவனம். சமீபகால வரலாற்றை எடுத்துக்கொண்டால் ஐ. நா படைகளானது எந்தவொரு நாட்டினதும் தேசிய விடுதலைப்போராட்டத்தில் தலையிட்டு, நீதியையும், சுதந்திரத்தையும் நிலைநிறுத்தியதாக நிகழ்வுகள் இடம்பெறவில்லை. கியூபா, வியட்நாம், அல்ஜீரியா, அங்கோலா, மொசாம்பிக், சிம்பாவே, நிகராக்குவா போன்ற சமீபத்திய வீரவிடுதலைப் போராட்டங்கள் அனைத்தும் ஐ. நா. படைகளின் தலையீடின்றி அந்தந்த நாட்டு மக்களின் ஒன்றுபட்ட ஆயுதப் புரட்சிப் போராட்டத்தால் வெற்றிகண்டவை என்பதை நாம் நினைவு கொள்ளுதல் அவசியம் தேசிய சுதந்திரம் கோரி இன்று நடைபெறும் ஆயுதம்தாங்கிய போராட்டங்களிலும் (இரீத்திரியா,

படிப்பகம்

www.padippakam.com

கிழக்கு தீமோர், பாலஸ்தீனம், வட அயர்லாந்து, மேற்கு சகாரா, நமீபியா, எல்-சல்வடோர்) ஐ. நா படைகள் குறுக்கிடப்போவதில்லை என்பது திண்ணம். நடைபெற்று முடிந்ததும், நடைபெற்றுக் கொண்டிருப்பதுமான தேசிய விடுதலைப் போராட்டங்கள் அனைத்தும் ஐ.நாவின் சட்டமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து விடுதலையைப் பெறலாமென்ற கற்பனாவாதத்தில் காலம்கழிக்கவில்லை. மக்களை அணிதிரட்டி, மக்கள் சக்தியை மூலமாகக்கொண்ட வெகுசன ஆயுதப்புரட்சிப் போராட்டம் மூலமே தேசிய சுதந்திரத்தைப் பெறமுடியுமென்ற உண்மையை இவ்விடுதலை இயக்கங்கள் உணராமலில்லை.

உலக விடுதலைப் போராட்டங்களின் வரலாற்று அனுபவங்களை உணர்ந்து நாமும் எமது போராட்டத்தை ஐதார்த்தமான, நடைமுறைச்சாத்தியமான வடிவங்களில் நெறிப்படுத்தவேண்டும் சனநாயக, சமாதான வழிதழுவி நாம் நடத்திய போராட்டங்கள் நசுக்கப்பட்டமையாலும் தேசிய ஒடுக்குமுறை அதிதீவிரமடைந்ததாலும் எமது தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமானது ஆயுதப் புரட்சிப் போராட்ட வடிவத்தில் உயர்ச்சியும் வளர்ச்சியும் கண்டுவருகிறது. ஆயுத எதிர்ப்புக் கிளர்ச்சியின் சரித்திர வெளிப்பாடாகத் தோன்றி அப்போராட்டத்தைத் தலைமைதாங்கி நடத்துவது எமது புரட்சி இயக்கம் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. நகரப்புற கொரில்லாப் பாணியில் வித்தூன்றிய எமது இயக்கம், வெகுசன ஆயுதப்போராட்டத்தை இலக்காகக்கொண்டு மக்கள் புரட்சி இயக்கமாக மலர்ந்துவருகிறது. ஆயுதம்தரித்த தேசிய விடுதலைப் போராட்டம் என்பது மிகவும் பாரதூரமான, மிகவும் பிரம்மாண்டமான கைங்கரியம். இந்தப் புரட்சிகர அரசியற் பாதையில் மக்களை விழிப்படையச்செய்து. மக்களைத் தயார்படுத்தி மக்களை ஆயுதம்தரித்து, மக்களைப் பாதுகாத்து, மக்களை ஒரேயணியில் ஒன்றுதிரட்டி வழிநடத்தி. மக்கள் போராட்டம் ஒன்றைச் செம்மையாக அமைப்பது அப்படி இலகுவான காரியமல்ல. அதிமுக்கியமாக இப்போராட்டப் பாதையில் எழும் பயங்கரமான சோதனைகளைத் தாக்குப்பிடிக்கும் ஆத்ம பலத்தை எமது மக்கள் பெறுவது அவசியம். உயிரிழப்பும், பொருளிழப்பும், சிறையும் சித்திரவதையுமாக எமது மக்கள் தாங்கொணு ஒடுக்குமுறைக்கு ஆளாக நேரிடும். மக்களை மாபெரும் துன்பத்தில் ஆழ்த்தி, அவர்களின் விடுதலை வேட்கையையும் ஆத்ம பலத்தையும் முறியடிக்க சிங்கள ஆளும்வர்க்கம் முயற்சிப்பது திண்ணம். இப்பொழுதே சிங்கள இராணுவம் அதைச் செய்துவருகிறது. இரத்தம் சிந்தாமல், தியாகம் செய்யாமல் விடுதலை கிடைக்கப் போவதில்லை என்பதை எமது மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். ஐதார்த்தமான போராட்ட நிலைமை இப்படி இருக்கும்பொழுது ஒரு சிலர் மந்திரத்தால் மாங்காயை விழுத்தும் மாயாவாதத் திட்டங்களை முன்வைக்கிருர்கள். ஐ. நா. மூலம் காரியத்தைச் சாதித்துவிடலாம், ஐ. நா. படைகள்வந்து நாட்டைப் பிரித்துக்கொடுக்கும் என்ற ரீதியில் போலி நம்பிக்கையை புகட்டுகிருர்கள். இப்படியான கற்பனாவாத மருட்சியில் எமது மக்களும் மருண்டுவிட்டால் அவர்களை புரட்சிகரமான ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அணிதிரட்வது அசாத்தியமாகிவிடும் அல்லவா ? ஆகவே, லண்டன் பிரகடனத்தில் வரையப்பட்டிருக்கும் திட்டமானது மக்களைத் திசைதிருப்பிவிடும் ஆபத்தான அம்சங்களைக்கொண்டிருப்பதால் இத்திட்டமானது எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்வதற்குக் குந்தகமாக அமையும்.

நாடுகடத்தப்பட்ட நிலையில் சுதந்திரத் தமிழீழ அரசைப் பிரகடனப்படுத்தவேண்டிய நிலைமை எழக்கூடும் ஆனுல் அதற்கான அரசியல் வரலாற்று சூழ்நிலைகள் கனியும்வரை நாம் பொறுத்திருக்க வேண்டும். அந்த அரசானது தமிழீழ புரட்சிகர விடுதலைச் சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமையவேண்டும். அந்த அரசின் செயற்திட்டமானது எமது விடுதலைப் போராட்டத்தின் பரிமாணங்களை ஆழமாகக் கிரகித்து, போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான புரட்சிகர செயற்திட்டத்தைக் கொண்டிருப்பதும் அவசியம்

www.padippakam.com

திரு. வைகுந்தவாசனின் தேசப்பற்றையும், அவரது துணிகர விடுதலைப்பணிகளையும் நாம் கௌரவிக்கும் அதேவேளை இத்தகைய திட்டங்களை அவசரப்பட்டு அமுலாக்க வேண்டாமென அவருக்கும் மற்றும் லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நண்பர்களுக்கும் வேண்டுகோள் விடுகிறோம்.

அரசியல் குழு
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**



## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் !

---

பிரச்சார வெளியீட்டு வாரியம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்

படிப்பகம்